# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 245/7A—1976 දෙසැම්බර් 29 වැනි බදාදා—1976.12.29**

245/7A ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பி. 31/71.

**1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்புமுயற்சிகள் (கொள்ளுதல்) சட்டம்**

**2 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழிற் பொறுப்புமுயற்சிகள் (கொள்ளுதல்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினொடு சேர்த்து வாசிக்கப்படும் 2 (1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பதில் நிதி அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய யான், கைத்தொழில்கள், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரின் வேண்டுதலின்பேரில், இதற்கான முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சி ஒவ்வொன்றையும், அத்தகைய ஒவ்வொரு பொறுப்புமுயற்சியினதும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டனவும் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டனவுமான ஆதனத்தையும், 1976 திசெம்பர் இருபத்தொன்பதாம் நாளிலிருந்து இக்கட்டளை மூலம் அரசாங்கத்துக்கு உரித்தாக்குகின்றேன்.

நீல் டி அல்விஸ்,
பதில் நிதி அமைச்சர்.

கொழும்பு,
1976 ம் ஆடு திசெம்பர் மீ 29 ந் உ.

### முதலாம் அட்டவணை

1. (வெல்லம்பிட்டி, மீத்தோட்டமுல்ல றோட்டில் 133 ஆம் இலக்கத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதான) ஜே. பீ. ரெக்ஸ்ரைல் இன்டஸ்ரீஸ் லிமிற்றெட் என அறியப்படும் கம்பனியினால், சின்தெடிக் புடவைவகைகளையும் மேற்சொல்லப்பட்ட கம்பனியின் அமைப்புப் புறவிதிகளில் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஏனைய பொருட்களையும் உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காகக் கொண்டுநடாத்தப்படும் தொழிற் பொறுப்பு முயற்சி.

2. (வெல்லம்பிட்டி, மீத்தோட்டமுல்ல றோட்டில் 133 ஆம் இலக்கத்தில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதான) ஜே. பீ. பிஷிங் இன்டஸ்ரீஸ் லிமிற்றெட் என அறியப்படும் கம்பனியினால், மீன் பிடி வலைகளையும் மேற்சொல்லப்பட்ட கம்பனியின் அமைப்புப் புறவிதிகளில் குறிப்பிடப்படக்கூடியனவான அத்தகைய வேறு பொருட்களையும் உற்பத்திசெய்யும் நோக்கத்துக்காகக் கொண்டு நடாத்தப்படும் தொழிற் பொறுப்பு முயற்சி.

### இரண்டாம் அட்டவணை

முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தொழிற் பொறுப்புமுயற்சி அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று அப்பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட காணியும் கட்டிடங்களும் உட்பட எல்லா அசைவற்ற ஆதனமும், எல்லாப் பொறித்தொகுதியும், இயந்திரத்தொகுதியும், உபகரணமும் பொருத்திகளும், எல்லா அசைவுள்ள ஆதனமும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது